(எட்டாவது பாராளுமன்றம் - மூன்றாவது கூட்டத்தொடர்)

இல. 61.]

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2019 மே 21, செவ்வாய்க்கிழமை பி.ப. 1.00 மணிக்கு

## சமுகமளித்தோர்:

**கௌரவ கரு ஜயசூரிய,** சபாநாயகர்

**கௌரவ ஜே.எம். ஆனந்த குமாரசிறி,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ செல்வம் அடைக்கலநாதன்,** குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சரும் தேசிய கொள்கைகள், பொருளாதார அலுவல்கள், மீள்குடியேற்றம், புனர்வாழ்வளிப்பு, வடக்கு மாகாண அபிவிருத்தி மற்றும் இளைஞர் அலுவல்கள் அமைச்சரும்

**கௌரவ (திருமதி) தலதா அதுகோரல,** நீதி மற்றும் சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ வஜிர அபேவர்தன,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர்

**கௌரவ ஜோன் அமரதுங்க,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கயந்த கருணாதிலக்க,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சரும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசானும்

**கௌரவ ரவி கருணாநாயக்க,** மின்வலு, எரிசக்தி மற்றும் தொழில்துறை அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அகில விராஜ் காரியவசம்,** கல்வி அமைச்சர்

**கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல,** அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சரும் பாராளுமன்றச் சபை முதல்வரும்

**கௌரவ மனோ கணேசன்,** தேசிய ஒருமைப்பாடு, அரசகரும மொழிகள், சமூக மேம்பாடு மற்றும் இந்து சமய அலுவலகள் அமைச்சர்

**கௌரவ தயா கமகே,** ஆரம்ப கைத்தொழில்கள் மற்றும் சமூகவலுவூட்டல் அமைச்சர்

**கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா,** புத்தசாசன மற்றும் வடமேல் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஹரின் பர்னாந்து,** தொலைத்தொடர்புகள், வெளிநாட்டு வேலைவாய்ப்பு மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சர்

**கௌரவ சஜித் பிரேமதாஸ,** வீடமைப்பு, நிர்மாணத்துறை மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார,** மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் உலர்வலய அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார,** பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சர்

**கௌரவ றிஸாட் பதியுதீன்,** கைத்தொழில், வாணிப அலுவல்கள், நீண்டகாலமாக இடம்பெயர்ந்த நபர்களின் மீள்குடியேற்றம், கூட்டுறவுத்துறை அபிவிருத்தி, தொழில் பயிற்சி மற்றும் திறன்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ திலக் மாரபன,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ சாகல ரத்நாயக்க,** துறைமுகங்கள், கப்பற்துறை மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ அர்ஜுன ரணதுங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் அமைச்சர்

**கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க,** மாநகரங்கள் மற்றும் மேற்கு அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ மலிக் சமரவிக்ரம,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர்

**கௌரவ மங்கள சமரவீர,** நிதி அமைச்சர்

**கௌரவ ரஊப் ஹகீம்,** நகரத் திட்டமிடல், நீர்வழங்கல் மற்றும் உயர்கல்வி அமைச்சர்

**கௌரவ அப்துல் ஹலீம்,** தபால் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய அலுவல்கள் அமைச்சர்

**கௌரவ கபீர் ஹாஷீம்,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ பி. ஹரிசன்,** கமத்தொழில், கிராமியப் பொருளாதார அலுவல்கள், கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம், கடற்றொழில் மற்றும் நீரகவள மூலங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற பொருளாதார மறுசீரமைப்பு மற்றும் பொது வழங்கல் அமைச்சர்

**கௌரவ அஜித் பி. பெரேரா,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விசேட பிரதேசங்கள் அபிவிருத்தி அமைச்சர்

**கௌரவ ருவன் விஜேவர்தன,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற வெகுசன ஊடக அமைச்சரும் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சரும்

**கௌரவ ரவீந்திர சமரவீர,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற தொழில் மற்றும் தொழிற்சங்க உறவுகள் அமைச்சர்

**கௌரவ சுஜீவ சேனசிங்க,** அமைச்சரவை அந்தஸ்த்தற்ற விஞ்ஞான தொழில்நுட்ப மற்றும் ஆராய்ச்சி அமைச்சர்

**கௌரவ அசோக் அபேசிங்க,** போக்குவரத்து மற்றும் சிவில் விமானச் சேவைகள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஜே.சீ. அலவத்துவல,** உள்ளக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரஞ்சித் அலுவிஹாரே,** சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வசந்த அலுவிஹாரே,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ பைஸால் காசிம்,** சுகாதாரம், போசணை மற்றும் சுதேச மருத்துவ இராஜாங்க அமைச்சர்

**கௌரவ லக்கி ஜயவர்தன,** நகரத் திட்டமிடல் மற்றும் நீர்வழங்கல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ நிரோஷன் பெரேரா,** தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ஏ. டி. பிரேமதாச,** மின்வலு, புதுப்பிக்கத்தக்க சக்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா,** சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,** கல்வி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அஜித் மான்னப்பெரும,** மகாவலி அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ ரன்ஜன் ராமநாயக்க,** நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ திலிப் வெதஆரச்சி,** கடற்றொழில் மற்றும் நீரக வளமூலங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ வடிவேல் சுரேஷ்,** பெருந்தோட்டக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர்

**கௌரவ அமீர் அலி சிஹாப்தீன்,** கமத்தொழில், நீர்ப்பாசனம் மற்றும் கிராமியப் பொருளாதார இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்,** மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர்

**கௌரவ எட்வட் குணசேகர,** காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு பிரதி அமைச்சர்

**கௌரவ நலின் பண்டார ஜயமஹ,** அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக பிரதி அமைச்சர்

**கௌரவ பாலித குமார தெவரப்பெரும,** சமூக வலுவூட்டல் பிரதி அமைச்சர்

**கௌரவ கருணாரத்ன பரணவிதான,** திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற்பயிற்சி பிரதி அமைச்சர்

**கௌரவ அப்துல்லா மஹரூப்,** துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை பிரதி அமைச்சர்

---

**கௌரவ ஹெக்டர் அப்புஹாமி**

**கௌரவ ரோஹித அபேகுணவர்தன**

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன**

**கௌரவ லக்ஷ்மன் யாப்பா அபேவர்தன**

**கௌரவ சிசிர குமார அபேசேகர**

**கௌரவ மஹிந்த அமரவீர**

**கௌரவ துஷார இந்துனில் அமரசேன**

**கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம**

**கௌரவ லஸந்த அலகியவன்ன**

**கௌரவ ஆனந்த அலுத்கமகே**

**கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே**

**கௌரவ (கலாநிதி) சீ.மு. முகம்மட் இஸ்மாயில்**

**கௌரவ ரீ. பீ. ஏக்கநாயக்க**

**கௌரவ அ. அரவிந்த் குமார்**

**கௌரவ கவீந்திரன் கோடீஸ்வரன்**

**கௌரவ துனேஷ் கன்கந்த**

**கௌரவ சந்திம கமகே**

**கௌரவ பியசேன கமகே**

**கௌரவ உதய பிரபாத் கம்மன்பில**

**கௌரவ நிஹால் கலப்பத்தி**

**கௌரவ தினேஷ் குணவர்தன**

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன**

**கௌரவ எஸ். எம். சந்திரசேன**

**கௌரவ டி.வீ. சானக**

**கௌரவ மலித் ஜயதிலக**

**கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ**

**கௌரவ அநுராத ஜயரத்ன**

**கௌரவ பியங்கர ஜயரத்ன**

**கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன**

**கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன**

**கௌரவ தயாசிறி ஜயசேகர**

**கௌரவ (திருமதி) சுமேதா ஜீ. ஜயசேன**

**கௌரவ மயில்வாகனம் திலகராஜா**

**கௌரவ ஜனக பண்டார தென்னகோன்**

**கௌரவ எம்.எஸ். தௌபீக்**

**கௌரவ சிறினால் டி மெல்**

**கௌரவ பியல் நிசாந்த த சில்வா**

**கௌரவ ரீ. ரன்ஜித் த சொய்சா**

**கௌரவ அநுர திசாநாயக்க**

**கௌரவ துமிந்த திசாநாயக்க**

**கௌரவ மயந்த திசாநாயக்க**

**கௌரவ சாலிந்த திசாநாயக்க**

**கௌரவ எச்.ஆர். சாரதீ துஷ்மந்த**

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா**

கௌரவ எஸ். பீ. நாவின்ன

கௌரவ மனுஷ நாணாயக்கார

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ முஹம்மது நசீர்

கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்

கௌரவ (டாக்டர்) ரமேஷ் பதிரண

கௌரவ கே.கே. பியதாஸ

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ லக்ஷமன் வசந்த பெரேரா

கௌரவ சுஜித் சஞ்ஜய பெரேரா

கௌரவ அசோக்க பிரியந்த

கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ எஸ். பிரேமரத்ன

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ இந்திக பண்டாரநாயக்க

கௌரவ பந்துல லால் பண்டாரிகொட

கௌரவ தாராநாத் பஸ்நாயக்க

கௌரவ தாரக்க பாலசூரிய

கௌரவ விஜித பேருகொட

கௌரவ முஹம்மது இப்ராஹிம் முஹம்மது மன்சூர்

கௌரவ எஸ்.எம். மரிக்கார்

கௌரவ இம்ரான் மஹ்ரூப்

கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ பைஸர் முஸ்தபா

கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா

கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்

கௌரவ பிமல் ரத்நாயக்க

கௌரவ சீ. பீ. ரத்நாயக்க

கௌரவ பிரசன்ன ரணதுங்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ சமல் ராஜபக்ஷ

**கௌரவ நாமல் ராஜபக்ஷ**

**கௌரவ மஹிந்த ராஜபக்ஷ,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**

**கௌரவ நிமல் லான்சா**

**கௌரவ காமினி லொக்குகே**

**கௌரவ ஜானக வக்கும்புர**

**கௌரவ (கலாநிதி) ஜயம்பதி விக்ரமரத்ன**

**கௌரவ ஏ.ஏ. விஜேதுங்க**

**கௌரவ லக்ஷ்மன் ஆனந்த விஜேமான்ன**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) துஸிதா விஜேமான்ன**

**கௌரவ (திருமதி) ரோஹினி குமாரி விஜேரத்ன**

**கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம**

**கௌரவ சமிந்த விஜேசிறி**

**கௌரவ கஞ்சன விஜேசேகர**

**கௌரவ துலீப் விஜேசேகர**

**கௌரவ ஹேஷா விதானகே**

**கௌரவ ச. வியாழேந்திரன்**

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ விமல் வீரவங்ச**

**கௌரவ குமார வெல்கம**

**கௌரவ சி. சிறீதரன்**

**கௌரவ ஞானமுத்து ஸ்ரீநேசன்**

**கௌரவ (திருமதி) சாந்தி ஸ்ரீஸ்கந்தராசா**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ சந்தித் சமரசிங்க**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ ரஞ்சித் சியம்பலாபிடிய**

**கௌரவ முத்து சிவலிங்கம்**

**கௌரவ அண்ணாமலை நடேசு சிவசக்தி**

**கௌரவ லக்ஷமன் செனெவிரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ விஜித் விஜயமுணி சொய்சா**

**கௌரவ டி.எம். சுவாமிநாதன்**

**கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி**

**கௌரவ விஜேபால ஹெட்டிஆரச்சி**

**கௌரவ இந்திக அநுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ ஏ. எச். எம். பௌஸி**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திரு. நீல் இத்தவல, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திருமதி குஷானி ரோஹனதீர, உதவிச் செயலாளர் நாயகம்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

**1. *சபாநாயகரின் அறிவித்தல்கள்* :** சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல் விடுத்தார்:— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 79 ஆம் இலக்க, உறுப்புரையின் பிரகாரம் "தெங்கு அபிவிருத்தி (திருத்தம்)" எனும் சட்டமூலத்தில், 2019 மே 14 ஆம் திகதி என்னால் சான்றுரை எழுதப்பட்டதென்பதை அறிவிக்க விரும்புகிறேன்.

**2. பத்திரங்கள் சமர்ப்பித்தல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 41ஆ(6) மற்றும் 55 (5) ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் 2018 ஆம் ஆண்டின் மூன்றாம் காலண்டுக்கான (2018.07.01 – 2018.09.30) பொதுச்சேவை ஆணைக்குழுவின் செயல்நிறைவேற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(2) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் 1979 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, பயங்கரவாதத் தடுப்பு (தற்காலிக ஏற்பாடுகள்) சட்டத்தின் 27 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களால் ஆக்கப்பட்டு, 2019 மே 13 ஆம் திகதிய 2123/3 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள் சமர்ப்பித்து இவ்வொழுங்குவிதிகள், தேசிய பாதுகாப்பு பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கும் சட்ட விவகாரம் (ஊழலுக்கெதிரான) மற்றும் ஊடகத்துறை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கும் ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(3) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவு மற்றும் 2019 ஏப்பிறல் 22 ஆம் திகதிய 2120/5 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான 2019 ஆண்டின் 1 ஆம் இலக்க அவசரகால (நானாவித ஏற்பாடுகள் மற்றும் தத்துவங்கள்) ஒழுங்குவிதிகளின் 75(1) ஆம் ஒழுங்குவிதியின் கீழ் சனாதிபதி அவர்களால் ஆக்கப்பட்டு, 2019 மே 13 ஆம் திகதிய 2123/2 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) (40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் கீழ் சனாதிபதி அவர்களால் ஆக்கப்பட்டு, 2019 மே 13 ஆம் திகதிய 2123/4 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

அக்கட்டளை மற்றும் ஒழுங்குவிதிகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(4) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2015 ஆம் ஆண்டுக்கான இலங்கை மாநாட்டு பணியகத்தின் வருடாந்த அறிக்கையை சமர்ப்பித்து இவ்வறிக்கை, சர்வதேச தொடர்புகள் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(5) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2018 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2000 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, காப்புறுதித் தொழிலை ஒழுங்குபடுத்தற் சட்டத்தின் 16 ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் 112 ஆம் பிரிவின் கீழ் நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 திசெம்பர் 31 ஆம் திகதிய 2104/9 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து இவ்வறிக்கை மற்றும் ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(6) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2017 ஆம் ஆண்டுக்கான றுஹுணு பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை;

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான கொழும்பு பல்கலைக்கழகத்தின் உயிர் இரசாயனவியல், மூலக்கூற்று உயிரியல் மற்றும் உயிரியில் தொழில்நுட்ப நிறுவகத்தின் ஆண்டறிக்கை;

(iii) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆங்கில பட்ப்பின்படிப்பு நிறுவகத்தின் வருடாந்த அறிக்கையும் கணக்குகளும்;

(iv) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் வருடாந்த அறிக்கை; மற்றும்

(v) 2017 ஆம் ஆண்டுக்கான இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து இவ்வறிக்கைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(7) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான தேசிய அருங்கலைகள் பேரவையின் வருடாந்த அறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கை, உற்பத்திகளும் சேவைகளும் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(8) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017 ஆம் ஆண்டுக்கான கரும்பு ஆராய்ச்சி நிறுவனத்தின் ஆண்டறிக்கையைச் சமர்ப்பித்து இவ்வறிக்கை, காணி மற்றும் கமத்தொழில் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(9) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2017.06.06 முதல் 2017.12.08 வரையிலான காலப்பகுதிக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது அறிக்கையில் நெடுஞ்சாலைகள், வீதி அபிவிருத்தி மற்றும் பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து இவ்வறிக்கை, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(10) 2017.06.06 முதல் 2017.12.08 வரையிலான காலப்பகுதிக்கான அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவினால் 2019.02.21 ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட முதலாவது அறிக்கையில் பொது நிருவாக மற்றும் அனர்த்த முகாமைத்துவ அமைச்சு தொடர்பில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் தொடர்பான 119(4) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் பிரகாரம், அவதானிப்புக்கள் மற்றும் எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் தொடர்பான அறிக்கையை சமர்ப்பித்து இவ்வறிக்கை, அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(11) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர், 2018 ஆம் ஆண்டுக்கான அஞ்சல் சேவைகள் மற்றும் முஸ்லிம் சமய விவகாரங்கள் அமைச்சின் செயல் நிறைவேற்று அறிக்கையை சமர்ப்பித்து இவ்வறிக்கை, உள்ளக நிருவாகம் மற்றும் அரச முகாமைத்துவம் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(12) காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் —

(i) 2016 ஆம் ஆண்டுக்கான மனிதவலு மற்றும் வேலைவாய்ப்புத் திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2017 ஆம் ஆண்டுக்கான தொழில் திணைக்களத்தின் ஆண்டறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்து இவ்வறிக்கைகளை கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**3. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்** : கல்வி மற்றும் மனித வள அபிவிருத்தி பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவின் தவிசாளர் கௌரவ (பேராசிரியர்) ஆசு மாரசிங்க அக் குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட, "2013 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, விளையாட்டில் ஊக்குவிப்புப் பதார்த்தப் பயன்பாட்டிற்கெதிரான சமவாயச் சட்டத்தின் கீழான ஒழுங்குவிதிகள்" தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) கம்பஹா, அக்கரவிட்ட, இல. 179/2 இல் வதியும் திரு. ஐ.ஏ.என்.ஜே. பெரேராவினது 2019.01.21 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

(2) பொரலந்த, வங்கிய கும்புர, ''அமரகோன் இல்லம்'' எனும் முகவரியில் வதியும் திரு. ஏ.ஆர்.டப்ளியூ.எம்.எம்.ஆர். அமரகோனினது 2019.01.06 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ சமிந்த விஜேசிறி சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள், 30 (10) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளைக்கமைய பொது மனுக்கள் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**5. சமூகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணைகள்:** கௌரவ தினேஷ் குணவர்தன அவர்கள் கௌரவ சீ.பீ ரத்னாயக்க வழிமொழிய சமர்ப்பித்த பிரேரணை,— அரசியலமைப்பின் 66 (ஊ) உறுப்புரையின் கீழ், மாத்தறை தேர்தல் மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் கௌரவ சந்திரசிறி கஜதீர அவர்களுக்கு 2019 மார்ச் 12 ஆம் திகதி முதல் மூன்று மாதங்களுக்கு பாராளுமன்ற அமர்வுகளுக்குச் சமுகமளிக்காதிருப்பதற்கு அனுமதி கோரும் பிரேரணையை நான் சமர்ப்பிக்கின்றேன்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**6. செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் (நீக்கல்):** அரச தொழில் முயற்சிகள், மலைநாட்டு மரபுரிமைகள் மற்றும் கண்டி அபிவிருத்தி அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 2011 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, செயற்பாடு குறைவாகவுள்ள தொழில்முயற்சிகளுக்கும் அல்லது குறைவாக பயன்படுத்தப்படுகின்ற சொத்துக்களுக்கும் புத்துயிரளித்தல் சட்டத்தை நீக்குவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 யூன் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

**7. இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகம் (திருத்தம்):** நிதி அமைச்சர் சார்பாக காணி மற்றும் பாராளுமன்ற மறுசீரமைப்பு அமைச்சர் சமர்ப்பித்த சட்டமூலம்,— 1975 ஆம் ஆண்டின் 33 ஆம் இலக்க, இலங்கை மதிப்பாளர்கள் நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்.

சட்டமூலம் 2019 யூன் 04 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை இரண்டாம் மதிப்பீடு செய்யப்படுமாக எனவும், அது அச்சிடப்படுமாக எனவும் அது உரிய துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்படுமாக எனவும் கட்டளையாயிற்று.

**8. பாராளுமன்ற அமர்வுகள் :** பாராளுமன்றச் சபை முதல்வர் சமர்ப்பித்த பிரேரணை,— 8 ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரம் பி.ப. 1.00 மணி முதல் 6.30 மணி வரை இருக்குமாக. பி.ப. 6.00 மணிக்கு 8(5) ஆம் பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 6.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை:** அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர், சமர்ப்பித்த பிரேரணை,— 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 (4) ஆம் பிரிவின் கீழ் அபிவிருத்தி உபாய முறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2018 ஓகஸ்ட் 14 ஆம் திகதிய 2084/18 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2019.03.29 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(பி.ப. 2.32 மணிக்கு குழுக்களின் பிரதித் தவிசாளர் தலைமை தாங்கினார்.)

“கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்குவாராக” என கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன முன்மொழிய அதனை கௌரவ பிமல் ரத்நாயக்க வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.34 மணிக்கு கௌரவ ஹர்ஷண ராஜகருணா தலைமை தாங்கினார்.)

“கௌரவ சந்தித் சமரசிங்க தலைமை தாங்குவாராக” சுற்றுலாத்துறை அபிவிருத்தி, வனசீவராசிகள் மற்றும் கிறிஸ்தவ சமய அலுவல்கள் அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.04 மணிக்கு கௌரவ சந்தித் சமரசிங்க தலைமை தாங்கினார்.)

“கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்குவாராக” கௌரவ அனுர சிட்னி ஜயரத்ன முன்மொழிய அதனை கௌரவ பந்துல லால் பண்டாரிகொட வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.38 மணிக்கு கௌரவ (திருமதி) ஸ்ரீயாணி விஜேவிக்கிரம தலைமை தாங்கினார்.)

“கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்குவாராக” அபிவிருத்தி உபாயமுறைகள் மற்றும் சர்வதேச வர்த்தக அமைச்சர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 5.08 மணிக்கு கௌரவ மயந்த திசாநாயக்க தலைமை தாங்கினார்.)

(பி.ப. 5.40 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. ஒத்திவைப்பு** : “இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக” என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் பி.ப. 6.00 மணிக்கு 2019 மே 22 ஆம் திகதி புதன்கிழமை பி.ப. 1.00 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது.